THE WORLD NEEDS THE WORD
IBT
பிப்ரவரி 2026
மலர் 24, இதழ் 5

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# தேவன் தரும் தரிசனங்களும், சொப்பனங்களும்



# தேவன் தரும் தரிசனங்களும், சொப்பனங்களும்

யாக்கோபு பதான் அரானுக்கு போகப் பிரயாணப்பட்டுப் போகும்போது, சூரியன் அஸ்தமித்தபடியால் அங்கே அவர் நித்திரை செய்யும்படி படுத்துக் கொண்டார். அங்கே ஒரு சொப்பனங்கண்டார். அதாவது, பூமியிலே ஒரு ஏணி வைக்கப்பட்டிருந்தது. அதின் மற்றொரு நுனி வானத்தை எட்டியிருந்தது. அதற்கு மேலாக கர்த்தர் நின்று, தான் யார் என்பதையும், யாக்கோபுடைய சந்ததியெல்லாம் தான் படுத்திருந்த பூமியை எப்படி சுதந்தரித்துக் கொள்வார்கள் என்பதைக் குறித்தும் யாக்கோபோடே பேசினார். நித்திரைத் தெளிந்து யாக்கோபு இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல என்று சொல்லி அந்த இடத்திற்கு பெத்தேல் என்று பெயரிட்டார். கர்த்தரிடம் முதன் முதலாக தசமபாகம் செலுத்துகிறேன் என்று சொல்லி ஒரு பொருத்தனைப் பண்ணிக் கொண்டார்.

இந்த புதிய வருடத்தில் நாம் எத்தனையோ பொருத்தனைகளை நம் இருதயத்தில் நமக்கு நாமே உறுதிப்பாடாக செய்திருப்போம். ஆனால், நாம் நண்பர்களோடு அல்லது உறவினர்களோடு பொருத்தனை செய்யக்கூடாது. நம்மை உருவாக்கின, தம்முடைய சாயலால் படைத்த தேவனோடு நாம் உடன்படிக்கை மற்றும் பொருத்தனை செய்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நமக்கு ஒரு பயமிருக்கும். நாம் மனிதோடு பொருத்தனை பண்ணினால் குறுகிய நாட்களில் மறந்து போகும். நம் இதயத்திலிருந்து மறைந்தும் போய்விடும். தேவனோடு நாம் பண்ணும் எந்தக் காரியத்தையும், செயலையும் நாம் மறக்கவும் கூடாது, மறக்கவும் முடியாது. இந்த இடத்திற்கு லூஸ் என்ற பழைய பெயரை மாற்றி, பெத்தேல் (தேவனுடைய வீடு – House of God) என்று பெயரிட்டார்.

தேவன் நமக்குத் தரும் சொப்பனத்திற்கும், தரிசனத்திற்கும் அதிக வித்தியாசமுண்டு. இதுவரை தேவனால் தரிசனமோ, சொப்பனமோ காணாமல் இருந்திருப்போமானல், இந்த வருடத்தில் கர்த்தர் நமக்கு இந்த இரண்டு காரியத்தையும் தர ஊக்கமாக நேரத்தை ஒதுக்கி, கர்த்தரோடு ஜெபத்தின் மூலமாகப் பேசுவோமாக!

சொப்பனம் என்றால் கனவு (Dream) பாபிலோனிய ராஜாவான நேபுகாத்நேச்சார், எகிப்தின் ராஜாவான பார்வோன் கண்டதெல்லாம் கனவு. கனவானது பலசமயம் மறந்து போகும். ஒருவேளை நாம் கண்ட கனவுக்கு அர்த்தம் தெரிந்தால், நாம் சுதாரித்து நடந்த கொள்ளலாம்.

**அவர் இராக்காலத்துத் தரிசனமான சொப்பனத்திலே மனுஷருடைய செவிக்குத் தாம் செய்யும் காரியத்தை வெளிப்படுத்துவார் (யோபு 33 : 16).** இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது.

மகதலேனா மரியாள், யாக்கோபு, யோசேப்பு, தானியேல் கண்டது தரிசனம் (Vision).

பார்வோன், நேபுகாத்நேச்சர் கண்டது சொப்பனம்/கனவு (Dream).

டாக்டர் அம்பேத்கார் கண்டது தரிசனம். டாக்டர் அப்துல் கலாம் கண்டது கனவு.

ஒரு மனிதனோ, மனுஷியோ எந்தவிதக் குறைபாடுமில்லாமல் வாழமுடியாது. ஆண்டவரைச் சார்ந்து நாம் வாழ்வோமானால் குறைவெல்லாம் கண்டிப்பாக ஒருநாள் நிறைவாக மாறும். மனிதனைச் சார்ந்து வாழ்வோமானால் குறைவானது மாற்றம் அடையவே முடியாது. மூன்று முற்பிதாக்களும் கண்டது எல்லாமே தரிசனங்கள் தான். ஆனாலும் ஒவ்வொருவருடைய குடும்பத்திலும் ஒவ்வொரு விதமான குறைபாடுகள் இருந்தன. கர்த்தரை இறுகப்பற்றி வாழ்ந்தக்

காரணத்தினால் கர்த்தர் இடைபட்டு அவர்களுடைய தரிசனங்களையெல்லாம் வாழ்க்கையில் நிறைவாகக் காணும்படிச் செய்தார். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

எத்தனையோ ஆண்டுகளை காண்பதற்கு ஆண்டவர் நமக்கு கிருபை செய்திருக்கிறார். இந்த ஆண்டிலும் நம்மை சந்திக்க வந்திருக்கின்றார். நம்முடைய ஜீவியம் எப்படி இருக்குமென்று நமக்குத் தெரியாது. ஆனால், கர்த்தருக்குத் தெரியும். ஏலியின் குடும்பத்திற்கு நடக்கப் போகிற காரியத்தை எப்படி சாமுவேலின் மூலம் தேவன் தரிசனமாகச் சொன்னாரோ, அதேபோல் இந்த ஆண்டில் நம் குடும்பத்திற்கு, உறவினருக்கு, சபைக்கு என்ன நடக்கும், எப்பேர்ப்பட்ட ஆண்டாக இருக்குமென்று யாக்கோபைப் போல் தனித்து அமர்ந்து ஜெபிப்போமானால், நிச்சயமாக தரிசனத்தின் மூலம் நமக்கு வெளிப்படுத்துவார். வேதாகமத்திலே எத்தனையோ பரிசுத்தவான்களுக்கு சொப்பனம் மற்றும் தரிசனத்தின் மூலம் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். நிச்சயமாய் இந்த வருடத்தில் நமக்கும் வெளிப்படுத்துவார்; இந்த வருடத்தின் வாக்குத்தத்த வசனம்.

கர்த்தரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய உன் மீட்பர் உரைக்கிறார், **"...பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன்..." ஏசாயா 41 : 13.**

கர்த்தர் கொடுத்திருக்கும் வாக்குத்தத்த வசனம் துணை நிற்கிறது. யாக்கோபு தன் மகனான யோசேப்பைக் காண எகிப்துக்குப் போகப் பயணப்பட்ட சமயம், அன்று இரவிலே இஸ்ரவேலுக்குத் தரிசனமாகி யாக்கோபே, நீ எகிப்து தேசத்துக்குப் போகப் பயப்பட வேண்டாம். நான் உன்னுடனே எகிப்துக்கு வருவேன். அதாவது தரிசனம் என்பது சாதாரணக் காரியம் அல்ல. தரிசனத்திலே ஒரு விஷயத்தைக் கர்த்தர் பேசினால் அது கண்டிப்பாக நடக்கும். ஆகவே, இந்தப் புத்தாண்டில் ஆண்டவர் நம்மோடு தரிசனத்திலே பேச வேண்டுமானால் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். ஒன்று குழந்தையைப் போல் மாற வேண்டும். இரண்டாவது மனமாற்றம் / மனந்திரும்புதல் வேண்டும்.

வேதாகமத்திலே தரிசனம் பெற்ற மூன்றாவது முற்பிதாவான யாக்கோபின் மகன் யோசேப்பைக் குறித்தும் அவன் கண்ட சொப்பனத்தைக் குறித்தும் பார்க்கலாம்.

**"...என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது; உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது" என்றான் (ஆதி 37 : 7). "...சூரியனும், சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் என்னை வணங்கினது" என்றான் (ஆதி 37 : 9).**

யோசேப்பு இரண்டு விதமான சொப்பனங்களைக் கண்டான். அந்த இரண்டு சொப்பனங்களிலும் அரிக்கட்டுகள் மற்றும் நட்சத்திரங்கள் தன்னை வணங்கியதாகத் தன்னுடைய பதினொரு சகோதரர்களிடம் கூறினான். யோசேப்பை, தன் சகோதரர்கள் சொப்பனக்காரன் என்று கேலியும், கிண்டலுமாகப் பேசினர்; அழைத்தனர். யோசேப்பைக் கொலை செய்துவிடலாம் என்று திட்டம் போடும் அளவுக்கு அவன் மீது வெறுப்புக் காணப்பட்டது. இவற்றுக்கெல்லாம் ஒரே காரணம், ஆதி 37 : 3,4-வது வசனத்திலே யாக்கோபு தன்னுடைய முதிர் வயதிலே யோசேப்பு பிறந்ததினால் இஸ்ரவேல் அவனை மிகவும் நேசித்ததுதான். மேலும், சகோதரர் எல்லாரிலும் தங்கள் தகப்பன் அவனை அதிகமாய் நேசிக்கிறதைக் கண்ட போது, யோசேப்போடே பட்சமாய் பேசாமல் யோசேப்பை இன்னும் அதிகமாய் பகைத்தார்கள். இறுதியாக யோசேப்பு எகிப்திற்குப் போய் சேர்ந்தார்.

சாலொமோன் ஞானி, தான் எழுதின நீதிமொழிகளின் புத்தகத்தில் நீதி 17 : 17-இல் என்ன எழுதுகிறார்?

**...இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்.**

ஆனால், யோசேப்பின் வாலிபப் பருவத்தில் அவன் உடன் பிறந்தவர்கள் அவனை தொலைத்துக்கட்டத் தீர்மானித்தனர். ஆனால், கர்த்தர் யோசேப்போடே இருந்தார் (ஆதி 39 : 2) நமக்கு ஒரு கஷ்டம் வந்தால் அந்த நேரத்தில் நம்மை கைதூக்கி விடுவதற்குத்தான் நமக்கு அண்ணன், தம்பி பிறந்திருக்கிறார்கள் என்று ஞானி எழுதுகிறார். ஆனால், நமக்கு வரும் கஷ்டத்திற்கெல்லாம் காரணமானவர்கள் நம் சகோதர, சகோதரிகள்தான். வேதம் தெளிவாகச் சொல்லுகிறது; உன் வீட்டாரே உனக்கு சத்துரு என்று. ஆகவே யோசேப்புக்கு அவன் வீட்டிலிருந்த அவன் சகோதரர்களாலேயே தொல்லைகள் உண்டானது. அவர்கள் யோசேப்புக்கு வைத்த பெயர் சொப்பனக்காரன். **அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, "இதோ சொப்பனக்காரன் வருகிறான்" (ஆதி 37 : 19) என்றனர்.**

ஆபேலின் வாழ்விலே தனக்கு உதவியாக இருக்கக்கூடிய உலகத்தின் முதல் மகனான காயீன், ஒரு கொலைகாரனாக மாறி, ஆபேலைக் கொலை செய்தான். உடன் பிறந்தவர்களுக்கு நாம் துணை நிற்போம். இந்தப் புத்தாண்டில் ஆண்டவர் நமக்குத் துணையாக இருப்பேன் என்று வாக்குறுதி தருவதால், நாமும் மற்றவர்களின் கஷ்டத்திலே ஆதரவாக துணை நிற்போம். காலங்கள் உருண்டோடின. யோசேப்பு இன்னும் சிறையில் இருந்தான். கானான் தேசத்திலே பஞ்சம் தலைவிரித்தாடியது. யாக்கோபின் குடும்பத்தார் எல்லோரும் சாப்பாட்டுக்கு மிகவும் அல்லலுற்றனர். இந்த சூழ்நிலையில் எகிப்தின் ராஜாவான பார்வோன் ஒரு சொப்பனம் காண்கிறான்.

**பார்வோன் கண்ட சொப்பனம்**
**(ஆதி 41 : 18-20, 22-24)**

A. அழகும், புஷ்டியுமான ஏழு பசுக்கள்... கேவலமும், அவலட்சணமுமான ஏழு பசுக்கள்... அவலட்சணமான ஏழு பசுக்கள் கொழுமையான ஏழு பசுக்களையும் பட்சித்துப் போட்டது.

B. நிறைமேனியுள்ள ஏழு நல்ல கதிர்கள்.... சாவியானவைகளும் பதரானவைகளுமான ஏழு கதிர்கள்... சாவியான கதிர்கள் அந்த ஏழு நல்ல கதிர்களையும் விழுங்கிப் போட்டது.

தேவனுடைய அனுக்கிரகம் யோசேப்புக்கு அதிகம் இருந்தபடியால் பார்வோனுக்கு மங்களகரமான உத்தரவை தேவன் அருளிச்செய்வார் என்று யோசேப்பு கூறினான். ஏழு வருஷம் அமோக விளைச்சல், ஏழு வருஷம் பஞ்சம் தலை விரித்தாடும் என்று பார்வோனின் சொப்பனத்திற்கு விளக்கம் சொன்னான். இதுமாதிரியான விவேகமும், ஞானமும் உள்ளவன் உன்னைத் தவிர வேறொருவன் இல்லை. ஆகவே, எகிப்து தேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன் என்றான் பார்வோன்.

கர்த்தர் கொடுத்த ஞானத்தினால் யோசேப்பு என்ன செய்தான்? ஏழுவருடங்களில் எகிப்தில் விளைந்த தானியங்களையெல்லாம் கட்டி வைத்தான். சகல தேசங்களிலும் பஞ்சம் உண்டாயிற்று. ஆனால், எகிப்து தேசமெங்கும் ஆகாரம் இருந்தது. காலங்கள் அதிகமாகக் கடந்து சென்றது. எகிப்து தேசத்தில் தானியம் உண்டென்று யாக்கோபு அறிந்து, தன் பிள்ளைகளை (10 பேர் மட்டும்) அனுப்புகிறார். யோசேப்பின் மூலமாக இஸ்ரவேல் குடும்பமானது பஞ்சத்திலிருந்து காப்பாற்றப்பட்டது.

**யோசேப்பின் சொப்பனம்**
**எப்படி தரிசனமானது?**

இஸ்ரவேலின் மகனான யோசேப்பின் சொப்பனமானது தரிசனமானது எப்போது என்று பார்த்தால் தேவனானவர் எப்படி ரூத், நகோமி வாழ்வில் இடைபட்டாரோ அதே வண்ணம்

யோசேப்பு மற்றும் பதினொரு சகோதரர்களின் வாழ்விலும் இடைபட்டார். மகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும் பெறுவதற்கு இஸ்ரவேலின் பிள்ளைகளுக்குள் மனமாற்றத்தைக் கொண்டு வந்தார். மனமாற்றம் பெறுவதற்கு காரணமாக அமைந்தது, யோசேப்பின் வாயின் சொற்கள்.

தானியம் வாங்கச் சென்ற சகோதர்கள் யோசேப்பைக் கண்ட தருணம் சொப்பனம் தரிசனமானது, உ ண்மையானது.

**a. ...முகங்குப்புறத் தரையிலே விழுந்து வணங்கினார்கள் (ஆதி. 42 : 6).**

**b. ...கையில் இருந்த காணிக்கையை வீட்டிற்குள் அவனிடத்தில் கொண்டு போய் வைத்து, தரைமட்டும் குனிந்து, அவனை வணங்கினார்கள் (ஆதி. 43 : 26).**

**<u>யோசேப்பின் இனிய சொற்களும், சகோதரர்களின் மனமாற்றமும் :</u>**

**a. ...ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார் ஆதி 45 : 5.**

**b. ... உங்களை உயிரோடே காப்பதற்காகவும், தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார் ஆதி 45 : 7.**

**c. ... நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்திற்கு அனுப்பினார் (ஆதி 45 : 8).**

இந்த ஆண்டில் எல்லா காரியத்திற்கும் நம் தேவனாகிய ஆண்டவரை சர்வ சிருஷ்டிக்கும் எஜமானரை முன்னே வைப்போமாக. இந்த வருடத்தில் நாம் கடைபிடிக்க வேண்டிய காரியங்கள் மூன்று.

1. மனம் மாறுவோம், மனமாற்றம் பெறுவோம்.
2. மன்னிப்போம், மறப்போம்.
3. மனதால் பிறரை நேசிப்போம்.

முதல் இரண்டு தலைப்புக்குரிய பகுதியாக புதிய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. மூன்றாவது தலைப்புக்குரிய பகுதியாக பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. எத்தனையோ பொருத்தனைகளை நம் மனதில் ஒவ்வொரு புதிய ஆண்டிலும் ஏறெடுக்கிறோம். ஆனால், அந்தக் குறிக்கோள்களை ஆண்டின் இறுதிவரை கடைபிடிக்க நம்மால் முடிவதில்லை. இந்த 2026-ஆம் ஆண்டின் புதுவருடமானது மற்ற வருடங்களைப் போல் இல்லாமல், நாம் ஆண்டவரோடு மேற்குறித்த மூன்று காரியங்களைக் குறித்து ஒரு உடன்படிக்கை செய்து கொள்வோம். அப்போது கண்டிப்பாக ஆண்டின் இறுதிவரை நாம் கடைபிடிக்க மறக்க மாட்டோம்.

**<u>1. மனம் மாறுவோம், மனமாற்றம் அடைவோம்.</u>**

**... தேவனே, நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர் (சங். 51 :17).**

தாவீது ராஜா சங்கீதப் புஸ்தகத்திலே 73 பாடல்களைப் பாடியிருக்கிறார். அதிலே 39-வது பாடல்தான் சங்கீதம் 51. தீர்க்கதரிசி நாத்தான் மூலமாக தான் செய்த பாவம் உணர்த்தப்பட்ட போது, பாவத்தை அறிக்கையிட்டு மனம் மாறின தாவீது ராஜா பாடின பாடல்தான் இந்த சங்கீதம். எத்தனையோ பாவங்களை தாவீது செய்திருந்த போதிலும் உண்மையாக மனம் மாறி, மனந்திருந்தி மன்னிப்பு கேட்டபடியால் தேவன் அவரை மன்னித்தார். தேவனுக்கேற்ற பலி என்பது பாவத்திற்காக மனம் வருந்தி, மனமாற்றம் அடைந்து, புதிய வாழ்க்கை வாழ்வதற்கு விரும்பும் இருதயங்களே தேவனுக்கேற்ற பலிகளாகும்.

தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட மனிதனிடம் தேவன் விரும்பும் ஒரே காரியம் மனம் மாற வேண்டும், மனமாற்றம் அடைய வேண்டும்.

லூக். 17 : 12-19 வசனங்களில் பார்த்தால் சுகத்திற்காக கர்த்தரை நோக்கி கதறிக்கூப்பிட்ட பத்து குஷ்டரோகிகள், (யூதன்-9, சமாரியன்-1), சுகமான பின்பு ஆண்டவருக்கு நன்றி செலுத்த 9 யூதர்களும் வரவில்லை. சமாரியன் ஒருவன் மட்டுமே மனமாற்றம் அடைந்து ஆண்டவரைக் கண்டு நன்றி செலுத்தினான்.

லூக். 19 : 1- 9 வசனங்களிலே ஒரு அருமையான மனிதனைக் குறித்துப் பார்க்கிறோம். அவன் ஆயக்காரன், வரி வசூலிப்பவன்; பெரிய பணக்காரன். (Chief Revenue Officer). எரிகோ பட்டணத்து மக்களால் வெறுக்கப்பட்டவன். ஆனால், இயேசுவைக் காண வாஞ்சை-யாயிருந்தான். அவன் பெயர் சகேயு.

சகேயுவின் உள்ளத்திலே ஒரு கனவு. இயேசு என்பவர் எப்படிப்பட்டவரோ என்பதைக் காண நினைத்தான். தன்னால் அவரிடம் பேசமுடியுமா? அல்லது அவர் தன்னிடம் பேசுவாரா என்றெல்லாம் கனவு கண்டான். இறுதியில் ஒரு தீர்மானத்திற்கு வந்தான். என்ன நடந்தாலும் சரி, பார்த்தே ஆக வேண்டுமென்று முடிவுக்கு வந்தான். கூட்டம் அதிகமாக இருந்தபடியால் இயேசுவானவர் வரும் கூட்டத்திற்கு முன்னாக ஓடி, எரிகோ பட்டணத்தில் இருந்த ஒரு அத்தி மரத்தில் ஏறி அமர்ந்து கொண்டு கூட்டம் வரும் திசையை நோக்கிக் கொண்டிருந்தான்.

தரிசனம் என்பது எல்லோருக்கும் கிடைக்காது. ஆனால், சகேயுவுக்கு கர்த்தரின் தரிசனம் கிடைத்தது. கூட்டத்தோடு கூட்டமாக நடந்து வந்த நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, சகேயு அமர்ந்திருந்த மரத்தின் அருகில் வந்து நின்றார். மரத்தில் அமர்ந்திருந்த சகேயுவை அண்ணார்ந்து பார்த்தார். சகேயுவுக்கு இயேசு கிறிஸ்துவை நேராகக் காணும் தரிசனம் கனவாக அல்ல நினைவாகக் கிடைத்தது. தன்னைப் பெயர் சொல்லி ஆண்டவர் அழைத்ததும் சகேயுவுக்கு தலைகால் புரியவில்லை. மனது முழுவதும் ஒரே வியப்பும், சந்தோஷமும் குடிகொண்டது. தரிசனம் பெற்ற சகேயு மனம் மாறினான். தான் செய்கிற, செய்த காரியங்களையெல்லாம் ஆண்டவரிடம் கணக்கு ஒப்புவித்தான். கிறிஸ்துவின் தரிசனத்தால் மனமாற்றம் அடைந்தான். எரிகோ பட்டணத்தார் முன்னால் அவனுடைய வீடு இரட்சிப்பின் வீடாக மாறியது.

தரிசனம் என்பது அடிக்கடி கிடைக்காது. கிடைக்கும் சமயத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்வோம். கிறிஸ்துவைக் காண வேண்டுமென்று வாஞ்சித்த ஒரே ஆயக்காரன். ஒரே யூதன். தன்னைக் காண வாஞ்சிக்கும் எல்லோரையும் காண ஆண்டவர் சமயம் தருகிறார். சமயத்தையும், சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்வோம்.

## 2. மன்னிப்போம், மறப்போம்.

**... கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (கொலோ 3 : 13).**

அப்போஸ்தலரான பவுல், கொலோசெ மக்களுக்கு எழுதிய நிருபத்திலே மன்னிப்பைக் குறித்து எழுதியிருக்கிறார். எப்படி மன்னிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். அப். பவுலினுடைய ஒப்புமை(Comparision)யானது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு மனிதனின் உள்ளத்தை இணைத்து எழுதப்பட்டுள்ளது.

மன்னிப்பின் உண்மையான அர்த்தம் – செய்த தவறை மன்னிப்பதோடு நில்லாமல், அந்தத் தவறை மறந்துவிட வேண்டும். அப்படி மறக்காமல் இருப்போமானால், மன்னித்ததற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடும். வேதாகமத்திலிருந்து சில இடங்களைக் காண்போம்.

தாவீது ராஜா எத்தனையோ தவறுகளைச் செய்தார். ஆனால், அவர் மனம் மாறி பாவத்தை அறிக்கையிட்டபோது கர்த்தர் மன்னித்தார். அவர்

செய்த பாவக் காரியங்களை எல்லாம் மறந்தார். இதற்குச் சன்மானமாக என் இருதயத்திற்கு ஏற்றவன் என்று கூறினார்.

யோவான் 8-ஆம் அதிகாரத்திலே பாவத்தில் விழுந்த ஒரு பெண்ணை இயேசு கிறிஸ்துவின் முன்பாக நிறுத்தினர் பரிசேயர், வேதபாரகர் மற்றும் ஊர் ஜனங்கள். கிறிஸ்துவின் வாயிலிருந்து அந்தப் பெண்ணுக்கு என்ன தீர்ப்பு வருமென்று எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தனர். இரண்டு முறை தரையிலே தன் விரலினால் கிறிஸ்துவானவர் எழுதினார். அவர் என்ன எழுதினார் என்று வேதாகமத்திலே குறிப்பிடப்படாமல் இருந்தாலும், கிறிஸ்துவானவர் மகளே! உன்னை மன்னிக்கிறேன் என்று தான் எழுதியிருப்பார். ஏனென்றால் பதினொறாவது (வசனம் 11 ) வசனத்திலே ஆண்டவர் என்ன சொன்னார்?

**"...நீ போ, இனிப் பாவம் செய்யாதே" என்றார்.** (நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை) (யோ. 8 : 11).

ஆண்டவர் அந்தப் பெண்ணை மன்னித்ததோடு மட்டுமல்லாமல், மறந்தார். அப்படிப்பட்ட சுபாவம் நமக்குத் தேவை என்று கூறுகிறார்.

பழைய கசப்புகளை மனதிலே வைத்துக் கொண்டு அதையே நினைத்துக் கொண்டிருப்பதால் பயன் ஒன்றுமில்லை. நாம் யாருக்கு விரோதமாக தவறு செய்தோமோ அவர்களிடமே நேரில் சென்று மன்னிப்பு கேட்பது நல்லது. அப்படிச் செய்யாவிட்டால் அது ஆயுள் தண்டனை போல் நம் உள்ளத்தைச் சுற்றிக் கொண்டேயிருக்கும். அத்தகைய தண்டனை நமக்குத் தேவையா? வேண்டவே வேண்டாம். புதிய ஆண்டை மகிழ்ச்சியோடு அனுசரிப்போம்.

நாம் மற்றவர்களை மன்னித்தால் நம் பாவங்களை, குற்றங்களை நம் ஆண்டவர் நமக்கு மன்னிப்பார். ஆகவே, நம் வாழ்க்கையில் மற்றவர்களை மன்னிப்போம், தவறுகளை மறப்போம். விட்டுக் கொடுத்து வாழ்வதினால் ஒருக்காலும் கெட்டுப்போகவே மாட்டோம்.

**<u>3. மனதால் பிறரை நேசிப்போம்</u>**

**a. ... என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றான் (2 இராஜா 5 : 3).**

**b. கிட்ட வந்து அவனுடைய <u>காயங்களில்</u> எண்ணெயும் <u>வார்த்து, காயங்களைக் கட்டி,</u> அவனைத் தன் சுய வாகனத்தில் ஏற்றி, சத்திரத்திற்குக் கொண்டுபோய், அவனைப் <u>பராமரித்தான்</u> (லூக். 10 : 34).**

முதல் வசனமானது ஒரு புறஜாதியான் / தன்னுடைய எஜமான் - நோயிலிருந்து சுகம் பெற வேண்டும் என்று தன் உள்ளத்தால் நேசித்த ஒரு சிறுமியின் வாஞ்சை. இஸ்ரவேல் தேசத்திலிருந்து சிறைபிடித்துக் கொண்டு வந்த சீரியா நாட்டு படைத்தலைவனான ஒரு மிகப்பெரும் அதிகாரியான நாகமானை அவனுடைய வீட்டிலே குஷ்டரோகியாகப் பார்க்கிறாள் அந்தச் சிறுபெண். தன்னைச் சிறைபிடித்தபோது உடம்பெல்லாம் கவசத்துடன் இருந்தபடியால் நாகமானின் உடல் சுகவீனத்தை அப்பெண்ணால் காணமுடியவில்லை.

எந்த ஒரு கவசமும் இல்லாமல் சாதாரண உடையிலே அவனைப் பார்த்த போது முதலாவதாக **பயந்திருப்பாள்.** இவ்வளவு பெரிய படைத்தலைவன் தான் குணமடைய எந்த ஒரு வைத்தியரிடமும் அவன் மனைவியிலிருந்து ராஜா வரைக்கும் எந்த ஒரு முயற்சியும் செய்யாததை நினைத்து மனம் வருந்தினாள், ஆச்சரியப்பட்டாள். நாகமான் மூலமாக எல்லா வெற்றியையும் அடைந்து தன் தேசத்தின் எல்லையை சீரிய ராஜா விஸ்தரித்துக்

கொண்டானே தவிர, படைத்தலைவனை நேசிக்கவில்லையே என்று **வருந்தினாள்.**

தான் சிறைபிடிக்கப்பட்ட போது, நாகமானின் காலில் ஒருவேளை விழுந்து, கெஞ்சி, தன்னை விடுவிக்குமாறு அழுதிருப்பாள். தேவனுடைய திட்டம் என்ன? அந்தச் சிறு பெண்ணின் மூலமாக சீரியா தேசம் இரட்சிக்கப்பட வேண்டும். உண்மையான, ஜீவனுள்ள தேவன் யாரென்று அறிந்து கொள்ள வேண்டும் என்பதே.

எப்படி யோசேப்பு பேசின வார்த்தையின் மூலமாக, யாக்கோபின் மற்ற சகோதரர்கள் மனம் மாறினார்களோ, அதேபோல் இந்த சிறு பெண்ணின் மூலமாக பேசப்படும் நற்செய்தியின் மூலமாக நாகமான் சுகம் பெற்று, சீரியா தேசத்திற்கு ஒரு சாட்சியின் அடையாளமாக விளங்க வேண்டுமென்று தேவன் அச்சிறுபெண்ணை கைதியாக இஸ்ரவேல் தேசத்திலிருந்து சீரியா தேசத்திற்கு அனுப்பினார்.

<u>சிறுபெண்ணின் மன வாஞ்சை</u>

<u>சாராளின் அறிக்கை</u>

i) அவள் தன் எஜமானியைப் பார்த்து : **என் ஆண்டவன்.......** மேலுள்ள குஷ்டரோகத்தை நீக்கி விடுவார். ii) **என் ஆண்டவன்** முதிர்ந்த வயதுள்ளவருமான பின்பு எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ என்றாள் சாராள் (ஆதி 18 : 12).

வேதாகமத்திலே இஸ்ரவேல் தேசத்தார் தங்களைவிட வயதில் பெரிதானவர்களை ஆண்டவன் என்று அழைப்பது வழக்கத்தில் இருந்தது. ஆகவேதான் சாராள் தன் கணவனான ஆபிரகாமை என் ஆண்டவன் என அழைக்கிறாள். அதேபோல் தன் எஜமானான நாகமானை என் ஆண்டவன் எனக்கூறி கனப்படுத்துகிறாள் அந்த சிறுபெண். தான் ஒரு சிறைக்கைதி என்பதை மறந்தாள். தன் ஆண்டவன் சமாரியாவிலுள்ள தீர்க்கதரிசியை சந்தித்தால் மெய்யாகவே சுகம் பெற்று திரும்புவான் என்று விசுவாசித்தாள்.

நாகமானுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்த சிறு பெண்ணின் சொல்லுக்கு கட்டுப்பட்டுப் போனான். எலிசா தீர்க்கதரிசியை சந்திக்கிறான். எலிசா சொன்னதைப் போல் யோர்தானில் ஏழு தரம் மூழ்கி பரிபூரண சுகம் பெற்றான். தேவாதி தேவனை சாட்சி பகிர்ந்தான்.

**...இனிக் கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும், பலியையும் செலுத்துவதில்லை (2 இரா. 5 : 17).** சிறுமியின் நற்செய்தியைப் பாருங்கள்.

ஒரு புறஜாதியானை மனதார நேசித்து அவன் இரட்சிக்கப்பட வேண்டும், ஜீவனுள்ள தேவனை தன்னுடைய தேவனாக ஏற்றுக் கொள்ள வேண்டும், சுகம் பெற்றுத் திரும்ப வேண்டும் என்பதே அவளின் வாஞ்சையாக இருந்தது. கர்த்தர் அந்தச் சிறு பெண்ணை விவிலியத்தில் பதிவு செய்தார். நாமும் மனதார பிறரை நேசிப்போம்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவானவர் – நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை, உவமையாக ஒரு நியாயசாஸ்திரியிடம் கூறுகிறார். எருசலேமிலிருந்து எரிகோவிற்கு சென்ற ஒரு மனிதனின் நிலைமையை இயேசுவானவர் எடுத்துக் கூறினார்.

வழிப்போக்கர்களை அடித்து, மிரட்டி அவர்களிடம் உள்ள பொருட்களை அபகரித்துக் கொண்டு குற்றுயிராக சாலையிலே போட்டுவிட்டுச் செல்லும் கள்ளர்கள் வாழும் பகுதி வழியாக ஒரு யூதன் தனியாக வருகிறான். எப்போதும் போல வந்த அந்த மனிதனை அடித்து, அவனிடம் இருந்த பணம், பொருட்களை எடுத்துக் கொண்டு அடித்தவனை அப்படியே சாலையில் போட்டுவிட்டு கள்ளர்கள் போய்விட்டனர்.

அடிபட்டவன் சுயநினைவு இல்லாமல் கிடப்பதை அவ்வழியே வந்த ஆசாரியன், லேவியன் இரண்டு யூதர்களும் கண்டு விலகிப் போய் விடுகிறார்கள். மூன்றாவது ஒரு மனிதன் வருகிறான். அவன்

சமாரியன். யூதர்களும், சமாரியர்களும் எவ்விஷயத்திலும் ஒன்று கலக்கமாட்டார்கள். சமாரியர்களை கீழான மக்களாகக் கருதினார்கள்.

## சமாரியனுக்கு தேவன் தந்த வாய்ப்பு

சமாரியன் அவனைக் கண்டு மனதுருகினான் (லூக். 10 : 33).

சமாரியன் ஒருவன் அந்த வழியாகப் பிரயாணம் பண்ணி வருகிறான். அடிபட்டு ஒருவன் கிடப்பதைக் காண்கிறான். அந்த வழியாக எத்தனையோ பேர்கள் கூட்டமாகச் சென்றாலும், அவர்களையெல்லாம் சமாரியன் கண்டுகொள்ள வில்லை. அடிபட்டவனை தன் கண்களால் கண்டான். அடிபட்டுக் கிடக்கிறவன் ஒரு யூதன் என்று தெரிந்து கொண்டான். மனதிலே அன்பு கொண்டான்; இரக்கம் கொண்டான். தன்னைச் சுமந்து வந்த வாகனத்தை விட்டு இறங்கினான். அவசரத் தேவைக்கென்று கொண்டு வந்திருந்த எண்ணெயை எடுத்து காயங்களில் ஊற்றி, கட்டி, தன் சுயவாகனத்தில் ஏற்றி, அருகிலுள்ள சத்திரத்துக்கு கொண்டு சென்று, சத்திரக்காரனிடம் பணம் கொடுத்து அவனைப் பராமரிக்கச் செய்தான்.

## சத்திரக்காரனிடம் சமாரியன் என்ன சொன்னான்?

**...அதிகமாய் ஏதேனும் இவனுக்காக செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான் (லூக். 10 : 35).**

நம் தேவன் மனுஷன் பார்க்கிறபடி பார்ப்பதில்லை. காரணம் - **...மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் (1 சாமு 16 : 7).**

ஆம் பிரியமானவர்களே! சமாரியன் யூதனல்லாத ஒரு புறஜாதியான். எப்படி ஜாதி, மதம், இனம், மொழி எதுவும் பார்க்காமல் அடிபட்டுக் கிடப்பது யாராயிருந்தாலும் அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நேசத்தோடு முழு மனதோடு உதவினானோ, அதே போல் நாமும் இந்தப் புத்தாண்டில் அடுத்தவர்களை நேசிப்போம், உதவிக்கரம் நீட்டுவோம்; பராமரிக்க ஏதாவது உதவி செய்வோம்.

கர்த்தர் சமாரியனின் உள்ளத்தைப் பார்த்தார். அவன் சமாரியன் அல்லாத ஒருவனை எப்படி நேசித்தான் என்று கர்த்தர் கண்டு சமாரிய இனத்திற்கு விவிலியத்திலே ஒரு நீங்கா இடத்தை பதித்தார். நம்முடைய பெயர் கர்த்தரின் உள்ளத்திலே இடம் பெற வேண்டுமானால், மனதால் அடுத்தவர்களை முழுமனதோடு நேசிப்போம். கர்த்தரும் நம்மை நேசிப்பார்.

புத்தாண்டு என்பது புதியதாகப் பிறக்கும் வருடத்தின் முதல் நாள். இயேசுவானவர் பிறந்த எட்டாம் நாளிலே தேவ தூதன் சொல்லியபடியே அதற்கு இயேசு என்று பெயரிட்டார்கள். ஆலயத்திலே பெயரிடப்பட்டது. ஆண்டவருடைய பிள்ளைகளான நம் எல்லோருக்குமே ஆலயத்தில்தான் பெயரிடப்பட்டது. ஆனால், ஆண்டவருக்கு பெயரிடப்பட்ட அந்த நாள் உலகத்திற்கே ஒரு புதிய ஒளியாக யாரும் மறக்க முடியாத திருநாளாக உலக மக்கள் அனைவரும் கொண்டாடும் புனித நாளாகக் கொண்டாடப்படுகிறது.

அப்பேர்ப்பட்ட புதிய நாளில் புதிய கொள்கைகளை நாம் கடைபிடிப்பது நல்லது. தரிசனங்களையும், சொப்பனங்களையும் நாம் காண வேண்டுமானால், ஆண்டவரோடு பேசுவதற்கு நேரத்தை ஒதுக்குவோம். ஆண்டவர் மற்றும் யோவானுடைய முதல் பிரசங்கம், **மனம் மாற்றம் பெற வேண்டும்.** கர்த்தர் கிருபையை தந்திருக்கும் ஒவ்வொரு நிமிடமும் நாம் **மனம் மாற்றம் அடைய வேண்டும்,** தவறு செய்தவர்களை **மன்னிக்க வேண்டும்,** பிறரை **மனதால் நேசிக்க வேண்டும்.**

**– தொடர்ச்சி 12–ஆம் பக்கம்**

# IBT-இன் நிகழ்வுகள்




12.10.2025 அன்று கோவை போத்தனூர்
Vision Church of God சபையில் IBT ஊழிய
விளக்கமளிக்கும் சகோ. K. கிதியோன் அவர்கள்.




12.10.2025 அன்று கோவை போத்தனூர்
Vision Church of God சபையில் தேவ செய்தியளிக்கும்
சகோ. ராஜகுமார் அவர்கள்.



20.10.2025 அன்று ஒடிஷா கோண்டாபுரி
IBT ஆலயத்தில் நடைபெற்ற வாலிபர் கூட்டத்தில்
தேவசெய்தியளிக்கும் சகோ. கேசப் மிர்கான் அவர்கள்.



03-01-2026 அன்று IBT மையத்தில் நடைபெற்ற
உபவாச ஜெபக்கூடுகையில் தேவ செய்தியளிக்கும்
திருமதி. குயிலிராஜா அவர்கள்.



IBT கோண்டாபுரி பணித்தளத்தில்
நடைபெற்ற 2 நாள் நற்செய்திக் கூட்டத்தில்
தேவசெய்தியளிக்கும் IBT பணித்தள இயக்குநர்
திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள்.



நவம்பர் மாதம் கோவை IBT மையத்தில்
மொழிபெயர்ப்பு பணியில் ஈடுபட்டிருக்கும்
மொழிபெயர்ப்பாளர்கள்.

# IBT-இன் நிகழ்வுகள்



11.12.2025 அன்று கோவை நீலாம்பூரிலுள்ள "Saral De-Addiction" மையத்தில் கிறிஸ்துமஸ் பாடல்களைப் பாடும் IBT குழுவினர்.



11.12.2025 அன்று கோவை நீலாம்பூரிலுள்ள "Saral De-Addiction" மையத்தில் தேவசெய்தியளிக்கும் IBT பொருளாளர் திரு. ஜான் வில்லியம் அவர்கள்.



19.12.2025 அன்று IBT மையத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கீத ஆராதனையில் தேவ செய்தியளிக்கும் Rev. ஜான் ராஜா அவர்கள்.



19.12.2025 அன்று IBT மையத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கீத ஆராதனையில் Bible Quiz நடத்தும் திரு. S. தீமோத்தி அவர்கள்.



மத்திய பிரதேசம் IBT சட்டர்ப்பூர் பணித்தளத்தில் ஞாயிறு ஆராதனையில் தேவ செய்தியளிக்கும் IBT மிஷனெரி திரு. சஞ்சை குமார் அவர்கள்.



14.12.2025 அன்று ஒடிஷா பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கீத ஆராதனை நிகழ்வு.

9–ஆம் பக்க தொடர்ச்சி...

நிக்கொதேமுவிடம் நம் ஆண்டவர் என்ன சொன்னார்?

**...ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்... (யோ. 3 : 3).**

***Except a man be born again, he cannot see the kingdom of God (St. John 3 : 3)***

**Born Again - மறுடியும் பிறத்தல்**

**நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்... (மத். 18 : 3).**

***Except you be converted and become as little children you shall not enter into the kingdom of heaven (Matt. 18 : 3).***

நாளை என்பது வாழ்வில் நிச்சயமில்லாதது. கர்த்தர் தரும் கிருபையின் காலத்தை, சந்தர்ப்பத்தை நாம் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுதல் மிக, மிக அவசியமானதாகும்.

குழந்தையின் சுபாவம் : வெகுளித்தனமாகப் பார்ப்பது, சிரிப்பது, விளையாடுவது, கள்ளங்கபடற்ற விதத்தில் எதையும் மனதில் வைக்காமல் ஜீவிப்பது, நாம் பிறந்த போது இம்மாதிரியான குணாதிசயங்களோடு பிறந்தோம். பெரியவர்களான பின்பும் நம்மிடமிருக்கும் கெட்ட குணாதிசயங்களை கலாத். 5 : 19,20-ல் அப். பவுல் கூறியுள்ளவைகளை தள்ளிவிட்டு, மீண்டும் சிறு குழந்தைகளுக்குரிய குணத்தைப்போல் மாற வேண்டும். அப்போது தான் கர்த்தர் நம்மோடு இடைபடுவார். இந்தப் புதிய ஆண்டிலே சொப்பனங்களையும், தரிசனங்களையும் நாம் காண முடியும். அதற்கு நம்மை ஆயத்தப்படுத்துவோமாக!

இரண்டாவதாக, மன்னிப்பது பெரிய காரியம்தான். ஆனால், அதைவிடச் சிறந்தது மன்னித்த அந்தக் காரியத்தை முற்றிலுமாக மறந்து விடுவது.

லூக். 15 : 11-32 வசனங்களிலே ஒரு தகப்பனானவன் மனம் திருந்தி வந்த தன் மகனை எப்படி மன்னித்து ஏற்றுக் கொள்கிறான் என்பதை கீழேயுள்ள வசனங்கள் எடுத்துக் காட்டுகிறது.

**... உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல, உம்முடைய கூலிக்காரரில் (வேலைக்காரரில்) ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும்.... லூக். 15 : 19.**

தன்னுடைய சொந்த தகப்பனிடம் மகனானவன் அப்படியான வார்த்தைகளால் தன்னைத் தாழ்த்துகிறான் என்பதைப் பாருங்கள். இப்படிப்பட்ட தாழ்மை நம்மிடமோ / நம் உடன்பிறந்தவர்களிடமோ காணப்படுகிறதா? ஆண்டவர் சொன்னார், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் (லூக். 18 : 14).

தகப்பனின் உள்ளம் எப்படிப்பட்டது?

... தூரத்திலே மகனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவனைக் கட்டிக் கொண்டு முத்தஞ் செய்தான் (லூக். 15 : 20).

அழுக்கான கந்தைத் துணிக்குப் பதிலாக – உயர்ந்த ஆடைகள். பன்றி மேய்ப்பதற்கு வைத்திருந்த கோலுக்குப் பதிலாக – மோதிரம், வெறுங்காலுக்கு – காலனி, தவிட்டுக்குப் பதிலாக – விருந்து, பன்றியின் உறுமல்களுக்குப்பதிலாக – இசையும், நடனக் களிப்பும் ஏற்பாடு செய்தான் தகப்பன். அவன் செய்த பாவத்தையெல்லாம் மன்னித்து மறந்தான் தகப்பன்.

**"பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்**
**வா என்று உன்னை அழைக்கிறாரே"**

நம் ஆண்டவர் அப்படித்தான். எப்போது பாவத்தை உணர்ந்து மன்னிப்பு கேட்டு வருவோம் என்று எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார்.

கர்த்தரிடம் வந்து அறிக்கையிடுவோம். புதிய தரிசனங்களால் நம்மை முடிசூட்டுவார்.

மூன்றாவதாக நேசிப்பு. எத்தனை கோடி பணம் கொடுத்தாலும் அன்பிற்கோ, அரவணைப்பிற்கோ, நேசிப்பிற்கோ ஈடாகாது. ரூத் நகோமியை நேசித்தது, நகோமி ரூத்தை நேசித்தது எல்லாம் இவ்வளவு என்று அளவிட முடியாது. நூற்றுக்கு அதிபதி தன் வீட்டு வேலைக்காரன் மீது கொண்ட நேசம், மகதலேனா மரியாள் கிறிஸ்து மீது கொண்ட நேசம், தாவீது தேவன் மீது கொண்ட அபரிமிதமான நேசிப்பு – இவர்களின் நேசத்தை எல்லாம் அளவிட முடியவே முடியாது.

ஆண்டவர் கூறுகிறார் – உன்னைப் போல் பிறனை நேசி. தான் கண்ட சகோதரனிடத்தில் நேசிக்காதவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி நேசிப்பான்?

அடிபட்டுக் கிடந்தவனைக் கண்டும் காணாததுபோல் சென்ற ஆசாரியன், லேவியன் இருவரும் வேதத்தை நன்கு அறிந்தவர்கள். பத்து கட்டளைகளை நன்கு படித்தவர்கள். ஆலயப் பொறுப்பிலே மிகவும் சிறப்பாக செய்யக் கூடியவர்கள். ஆனால் உள்ளத்திலே ஈரம், அன்பு, பாசம், நேசம், உதவும் செயல் எதுவுமே இல்லாதவர்கள். ஆனால் சமாரியனோ எவ்வளவாக தன் முழு உள்ளத்தாலும் நேசித்து அந்த மனிதனை தன் சொந்த / உடன்பிறந்த சகோதரனாக நினைத்து, செய்த செயலைக் கண்டு நாமும் மற்றவர்களை இந்தப் புத்தாண்டில் நேசிப்போம்.

மன்னிப்போம், மறப்போம், மனமாற்றம் பெறுவோம். நேசிப்போம், கனவு – தரிசனமாகட்டும் – கர்த்தர் நமக்குத் துணை நிற்கிறார். ஆமென்!

அனைவருக்கும் என் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

**– திருமதி. பேர்ல் குயிலிராஜா**

# உலகச் செய்திகள்

★ ஐ.நா. அகதிகளின் முகமையின் தலைவராக முன்னாள் இராக் அதிபர் பர்ஹாம்சாலி (65) பதவி வகிக்க ஐ.நா. பொதுச்சபை அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம் அந்த முகமைக்கு அகதியாக இருந்த ஒருவர் முதல் முறையாகத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

★ ஆசிய நாடுகள் இடையே கால்பந்து விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில், AFC நேஷனல் லீக் கால்பந்து போட்டியை தொடங்க இருப்பதாக, ஆசிய கால்பந்து கூட்டமைப்பு அறிவித்தது.

★ அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் உத்தரவின்படி, வெனிசுலாவின் அதிபர் மதுரோவைச் சிறைபிடித்துள்ளது அமெரிக்க அரசு.

★ வங்கதேசத்தின் சிட்டகாங் நகரில், விசா விண்ணப்ப மையம் காலவரையின்றி மூடப்பட்டதாக இந்தியா தெரிவித்துள்ளது.

# ஒரு முக்கிய வேண்டுகோள்

## தேவை

★ சென்னையில் பணிபுரியும் முன்னேற்றப் பணியாளருக்கு 1 இருசக்கர வாகனம் தேவைப்படுகின்றது. தற்போதுள்ள பழைய வாகனத்தின் செலவு அதிகமாக வருவதால் புதிய வாகனம் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ. 1,10,000/-. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

# ஆசிரியர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான அன்பு சகோதர, சகோதரிகளுக்கு சத்திய வார்த்தையின் பத்திரிகையின் சார்பாக எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**அப்பொழுது இயேசு : சுத்தமானவர்கள் பத்து பேர் அல்லவா, மற்ற ஒன்பது பேர் எங்கே? (லூக்.17:17)**

அக்காலத்தில் குஷ்டரோகிகள் வீட்டைவிட்டு, ஊரைவிட்டு ஒதுங்கியே இருக்க வேண்டும். குஷ்டரோகத்திற்கு மருந்துகளும் கண்டுபிடிக்கப் படவில்லை. அவர்கள் குணமானால் முதலில் ஆசாரியரிடத்தில் சென்று தங்களைக் காண்பித்து, குணமானதை உறுதிப்படுத்திய பின்புதான் வீட்டிற்கு செல்லலாம். அப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில்தான் இந்த பத்து குஷ்டரோகிகளும் தூரத்தில் நின்று, ஐயரே எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டுக் கூப்பிடுகிறார்கள். இயேசு எதுவும் செய்யாமல், நீங்கள் போய் ஆசாரியருக்கு உங்களைக் காண்பியுங்கள் என்று சொன்னார். அவர்களும் நம்பிப் போனார்கள். போகும் வழியில் அவர்கள் சுகமடைந்தார்கள். சுகமடைந்த ஒன்பது பேரும் ஆசாரியருக்குத் தங்களை காட்டிவிட்டு போய்விட்டனர். ஆனால், ஒருவன் மாத்திரமே இயேசுவிடம் திரும்பிவந்து, உரத்த சத்தமிட்டு தேவனைத் தொழுது, இயேசுவின் பாதத்தில் விழுந்தான்.

தேவைகளும், கஷ்டங்களும், துன்பங்களும் நெருக்கும் பொழுது தேவனை முழுமூச்சாய்த் தேடாதவர்களே இல்லை. ஆனால், தேவைகள் சந்திக்கப்பட்டு கஷ்டங்கள் நீங்கி, வாழ்வில் உயர்வுகள், வசதி வாய்ப்புகள் கிடைத்துவிட்டால் அதே ஆர்வத்தோடும், அதே வாஞ்சையோடும் தேடுகிறவர்கள் எத்தனை பேர்? தமது தேவைகள் தீர்ந்ததும் அவர்கள் தேவனை விட்டு, தம் இஷ்டம் போல் வாழ்வதையே நாம் காணக்கூடியதாக இருக்கிறது. சுகமான ஒன்பது பேருக்கும் நன்றி சொல்ல வேண்டும் என்கிற உணர்வே வரவில்லை. முன்பு தனக்கு குஷ்டரோகத்தினால் தூரமாயிருந்தவர்கள் சுகமானதும் இன்னமும் தூரமானார்கள் என்பதே உண்மை.

**முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள் (எபே. 2:13).**

முன்பு பாவநோயினால் தூரமாயிந்த நம்மை கிறிஸ்து தம்முடைய சொந்த இரத்தத்தையே விலைக் கிரயமாக கொடுத்ததினால் அவருக்கு நாம் சமீபமானோம். இந்த விலையேறப்பெற்ற இரட்சிப்பிற்காக நித்தமும் நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1 தெச. 5:18).**

கடந்த மாதம் 10.1.2026 அன்று IBT-இன் திட்டக்கூடுகை IBT மையத்தில் நடைபெற்றது. IBT-இன் தலைவர் திரு. P. ஜெபஸ் செல்வின் அவர்கள், செயலர் திரு. G. வரமணிராஜ் அவர்கள் பொருளர் திரு. M. ஜான் வில்லியம் அவர்கள், பணித்தள இயக்குநர் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள் மற்றும் பிரதிநிதிகள் தமிழகத்தின் பல ஊர்களிலிருந்து கலந்து கொண்டு, இவ்வருட ஊழிய வளர்ச்சிக்கான நல்ல ஆலோசனைகளை வழங்கினார்கள்.

கடந்த டிசம்பர் மாதம் 11-ஆம் தேதியன்று கோவை நீலாம்பூரிலுள்ள “SARAL” De Addiction - மையத்திற்கு, கோவை IBT பிரதிநிதிகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் சென்று, இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தியை அறிவித்து பாடல்கள்பாடி, அவர்களுக்காக ஜெபித்தார்கள். IBT சார்பாக மதிய உணவு அங்குள்ள 100 பேருக்கு மேலாக உள்ளவர்களுக்கும், பணிபுரிபவர்களுக்கும் வழங்கப்பட்டது.

இதே மாதம் 14-ஆம் தேதியன்று ஒடிஷா, பாப்பன்பள்ளி, சிறுவர் இல்லத்தில் கிறிஸ்துமஸ் கீத

ஆராதனை சிறப்பாக நடைபெற்றது. முன்பு சிறுவர் இல்லத்தில் தங்கி, படித்து வந்த பிள்ளைகளில் 100-க்கும் மேலானவர்கள் கலந்து கொண்டார்கள்.

இதே மாதம் 19-ஆம் தேதியன்று கோவை IBT மையத்தில் கிறிஸ்துமஸ் கீத ஆராதனை நடைபெற்றது. இதில் Rev. ஜான்ராஜா ஐயா அவர்கள் சிறப்புப் பாடல்பாடி தேவசெய்தி அளித்தார். திரு. S. தீமோத்தி அவர்கள் வேத வினா விடை போட்டியை சிறப்பாக நடத்தி பரிசுகள் வழங்கினார். இதில் கோவை IBT பிரதிநிதிகள், அலுவலகப் பணியாளர்கள் கலந்துக் கொண்டார்கள். இறுதி ஜெபத்தை Mrs. குயிலிராஜா அவர்கள் ஜெபிக்க, Rev. ஜான்ராஜா ஐயா அவர்கள் ஆசீர்வாத ஜெபத்தை ஏறெடுக்க நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது. கலந்து கொண்ட அனைவருக்கும் தேனீர், சிற்றுண்டி வழங்கப்பட்டது.

உங்கள் ஜெபங்களில் IBT ஊழியத்திற்காக, ஊழியர்களுக்காக, நிர்வாகிகளுக்காக ஒரு சில நிமிடங்கள் தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் மூலமாக தடைகள் மாறும்! ஊழியம் வளரும்!! தேவ நாமம் மகிமைப்படும்!!! இவ்வருடம் உங்கள் அனைத்துத் தேவைகளையும் கர்த்தர் சந்திக்கவும், அனைவருக்கும் கர்த்தர் சுகம், பெலன், ஜீவன் தந்து, ஆசீர்வாதமான தேவ நாம மகிமைக்கென வாழ ஜெபிக்கிறோம்.

கர்த்தருக்குள் உங்கள் சகோதரர்

**K. ஜெய்சிங்**

# பணித்தளச் செய்திகள்

**மிஷனெரி : சகோ. இஸ்ரேல் எட்லா**

**பணித்தளம் : சந்தோஷ்ப்பூர் (ஒடிஷா)**

தேவனுக்கே துதி உண்டாவதாக!

கர்த்தரின் கிருபையால் கடந்த மாதம் என் மிஷனெரிப் பணியை தடையின்றி நடத்த முடிந்தது. மிஷனெரிப் பணிக்காக பைடபள்ளி, பந்தரிகுடா, தெம்ரா, மிர்மின்டா, சுரஹண்டி, தோரிகுடா, தெலகுடா, பஜர்குடா, டானிகுடா, தலாய்குடா, சொரிசாபாடர், பூஜாரிகுடா, பர்ஜகுடா, கோண்டாபுரி, நெங்கநால், சந்தோஷ்ப்பூர் மற்றும் கசம்பாலி ஆகிய கிராமங்களுக்குச் சென்று மிர்கான், தெஷியா மொழிகள் பேசும் மக்களைச் சந்தித்து, அவர்களுக்கு நற்செய்தியை அறிவித்து, கைப்பிரதிகளைக் கொடுத்து, தேவையானவர்களுக்காக ஜெபித்து வந்தேன். சகோ. ஆதித்யா பாக் என்பவர் அதிக நோய் பாதிப்பிலிருந்தார். அவருக்காக பாரப்பட்டு ஜெபித்ததினால் கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, அவருக்கு சுகம் கொடுத்தார்.

மேலும் சகோ. நகல், சந்திரகுமார், கணேஷ், பரசுராம், பிரசாந்த், சைட்டு, பிரேம்சந்த், ஜஸ்வர், தன்பதி, சகோதரிகள்: சஞ்சு, அனிமா, திலட்டமா, ரூபை, கமலா, மங்கள்தாய் மற்றும் முக்தா ஆகியோருக்காகவும் அவர்கள் குடும்பத்திற்காகவும் ஜெபித்தேன். இவர்கள் கர்த்தரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிப்பில் வளரவும் ஜெபித்தேன். இது தவிர, ஞாயிறு ஆராதனை, உபவாச ஜெபக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் IBT நிர்வாகிகள், மொழிபெயர்ப்பாளர்கள், மிஷனெரிகள், IBT தாங்குநர்கள் மற்றும் IBT-இன் அனைத்துப் பணிகளுக்காகவும் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. என் மிஷனெரிப் பணி மற்றும் என் குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

-----------------

**மொழிபெயர்ப்பாளர் : சகோ. தம்பித்துரை**

**மொழி : பனியா**

**பணித்தளம் : கூடலூர் (தமிழ்நாடு)**

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

மொழிபெயர்ப்புப் பணியில், பழைய ஏற்பாடு பாகத்தில் சங்கீதப் புத்தகத்தில் சரிபார்ப்பு செய்யப்பட்டது. இதில் சங்கீதம் 89 முதல் சங்கீதம்

104 வரை சரிபார்ப்பு செய்யப்பட்டது. நற்செய்திப் பணிக்காக கோழிப்பாலம், மார்கமுலா, பலா மரம் எம்.டி. நகர், புத்தூர் வயல் காலனி, கல்குவாரி காலனி மற்றும் விலாங்கூர் ஆகிய பகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்து நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டேன். முன்னேற்றப் பணிக்காக ராஜகோபாலபுரம், தாஜ் மருத்துவமனை சாலை, ஹெல்த் கேம்ப், மேல் கூடலூர், தர்கா ரோடு, காலனி, ஓ.எச்.வி. சாலை, புத்தூர் வயல் வடக்கு, தெற்கு, பந்தலூர், தேவாலா, நாயக்கன் முலா, மரப்பாலம் ஆகிய கிராமங்களுக்குச் சென்று IBT பங்காளர்கள், தாங்குநர்களைச் சந்தித்து, காணிக்கை பெற்று அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். கடந்த நவம்பர் மாதம் என் மூத்த மகளுக்கு ஆண்குழந்தை பிறந்துள்ளது. அவர்கள் இருவரின் சுகத்திற்காகவும், என் மொழிபெயர்ப்புப் பணி, புத்தகங்கள் விநியோகிப்பதில் உள்ள தடைகளை கர்த்தர் மாற்றவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

---

**மிஷனெரி : சகோ. லெமன் சின்சானி**
**பணித்தளம் : கோண்டாபுரி (ஒடிஷா)**

தேவனுக்கே துதி உண்டாவதாக!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். கர்த்தரின் பெரிதான கிருபையால் நவம்பர் மாதம் 7, 8 தேதிகளில் பல ஊழியங்கள் ஒன்றிணைந்து, நற்செய்திக் கூட்டம் நடத்தப்பட்டது. ஒடிஷாவிலுள்ள அதிகமான மிஷனெரிகள் மற்றும் IBT-இன் பணித்தள இயக்குநரும் கலந்து கொண்டு 2 நாட்களிலும் தேவ செய்தியளித்தார். அக்கூட்டம் மிகச் சிறப்பாக நடந்தது. ஏறக்குறைய 1000 பேர் கலந்து கொண்டார்கள். மிஷனெரிப் பணிக்காக 20 கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியை அறிவித்து, தெஷியா மொழியிலுள்ள கைப்பிரதிகளை விநியோகித்து, நற்செய்தியை 1 பேதுரு 1 : 13-20, லூக்கா 6 : 38, ஆகாய் 1 : 1-11 ஆகிய வசனங்களின் அடிப்படையில் நற்செய்தியைக் கூறினேன். ஞாயிறு ஆராதனை, சிறுவர் ஓய்வு நாள் பாடசாலை, உபவாச ஜெபக்கூட்டம் வீட்டு ஜெபக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. விசுவாசிகளின் உடல் சுகத்திற்காகவும், ஆவிக்குரிய வாழ்விற்காகவும் ஜெபித்தேன். என் மிஷனெரிப் பணியில் வரும் தடைகள், இன்னல்கள் மாறவும், என் மகன் மற்றும் மகள்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

---

**மொழிபெயர்ப்பாளர் : சகோ. S. ராஜா**
**மொழி : இருளா–குஞ்சப்பனை**
**பணித்தளம் : காரமடை (தமிழ்நாடு)**

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமையுண்டாவதாக. கடந்த மாதம் கர்த்தர் மொழிபெயர்ப்பு பணி சரிபார்த்தல் மற்றும் டைப்பிங் பணியை மேற்கொள்ள கிருபைப் பாராட்டினார். சங்கீதம் 119 முதல் சங்கீதம் 150 வரையிலும், நீதிமொழிகள் 1 முதல் நீதிமொழிகள் 6-ஆம் அதிகாரம் வரை சுமார் 669 வசனங்கள் உள்ள வார்த்தைகள் சரிபார்த்து டைப்பிங் பணி செய்யப்பட்டது. இந்த மாதம் புதிய ஏற்பாடுகள் ஏதும் விநியோகம் செய்யப்படவில்லை. மழை போன்ற இயற்கை காரணங்களால் விநியோகம் செய்ய முடியவில்லை. வருகின்ற மாதம் விநியோகம் தடையில்லாமல் செய்ய தேவன் கிருபை செய்யும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள். மேலும் சுவிசேஷ ஊழியம் செய்ய தேவன் அனுக்கிரகம் பாராட்டினார். கிறிஸ்துமஸ் விழாக் காலமாயிருப்பதால் பல இடங்களில் இயேசு பிறந்த நற்செய்தியை அறிவிக்க தேவன் கிருபை பாராட்டியிருக்கிறார். தொடர்ந்து மொழிபெயர்ப்பு பணியை இன்னும் முழு வாஞ்சையோடு செய்ய ஊழியத்திற்காகவும், எங்கள் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். ஒரு சில வார்த்தைகள் மட்டும் சரியான இருளா அர்த்தங்கள் கிடைக்காததால் மீண்டும் குஞ்சப்பனை பகுதிக்கு சென்று அங்குள்ள திரு. சந்திரன், ரகு ஆகிய இருவரின் உதவியோடு சரிபார்த்தல் பணியை நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளேன். அதற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**மிஷனெரி : சகாய ஸ்வீடன்**
**பணித்தளம் : பாப்பன்பள்ளி சிறுவர் இல்லம், ஒடிஷா**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கடந்த மாதம் முழுவதுமாக நமது சிறுவர் இல்லத்தில் படிக்கின்ற மாணவர்களை சுகத்தோடும், பெலத்தோடும் தேவன் பாதுகாத்தார். நவம்பர் மாதம் கோண்டாபுரியில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அங்கிருந்து பணித்தள இயக்குநரோடு பாப்பன்பள்ளி சிறுவர் இல்லம் வந்து சேர்ந்தோம்.

சிறுவர் இல்லத்தில் தினமும் காலை, மாலை நேரங்களில் கர்த்தருடைய வார்த்தையை போதிக்கவும், நல்ல ஒழுக்கங்களை கற்றுக் கொடுக்கவும், தேர்வு நடைபெற்று வருவதால் படிக்க வைத்தோம். சிறுவர் இல்லத்திற்குத் தேவையான பொருட்கள் வாங்குவதற்காக கலிமலா, ஊன்று கோண்டா, தொர்ணபால் ஆகிய இடங்களுக்குச் சென்று வந்தேன். சில பிள்ளைகளுக்கு தொண்டை வலி, சளி, காய்ச்சல் காணப்பட்டது. மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பராமரித்தோம். பிள்ளைகள் கூட சேர்ந்து வளாகத்தை சுத்தம் செய்தோம்.

பாப்பன்பள்ளி கிராமத்தில் சிலர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். கிராமத்தில் மிகவும் எதிர்த்து, ஊர்க்கூட்டம் ஏற்பாடு செய்து அவர்களுக்கு மிகுந்த உபத்திரவத்தை கொடுத்து பயமுறுத்தினார்கள். இதனால் 2 குடும்பங்களைத் தவிர மற்றவர்கள் இயேசுவை மறுதலித்து ஊரோடு சேர்ந்து விட்டனர். அந்த 2 குடும்பங்களையும் ஊர்க்கூட்டத்திற்கு அழைத்து உள்ளனர். கோசா மற்றும் இருமா ஆகிய இருகுடும்பங்கள் இயேசுவை மறுதலிக்காமல் நிலை நிற்கும்படியாக ஜெபியுங்கள். சிறுவர் இல்லப் பிள்ளைகள், வார்டன் குடும்பம், சமைக்கிற பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள்.

------------------

# சாயர்புரத்தின் தந்தை
# ஜி.யு. போப் (கி.பி. 1820 - 1908)
## சென்ற மாத தொடர்ச்சி....




இச்செமினெரியிலிருந்து உருவான சாயர்புரம் போப் நினைவு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, போப் கல்லூரி ஆகிய இரண்டு கல்வி நிறுவனங்களும் இதே குறிக்கோள் சொல்லையும், சின்னத்தையும் கொண்டுள்ளன. அக்காலத்தில் கிறிஸ்துவ சமய தலைமை இடங்களில் பலவற்றில் பாடசாலைகள் இருந்தன. அவற்றில் கற்றுத் தேறியவர்கள் மேற்படிப்பிற்குச் சாயர்புரம் செமினெரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். **மாணவர்களுக்கு இலவசமாகவே கல்வி வழங்கப்பட்டது.**

சென்னையிலுள்ள கிறிஸ்தவத் தலைமையிடம் தமிழகத்திலுள்ள எல்லா கிறிஸ்தவப் பணியாளர்களுக்கும் சாயர்புரம் செமினெரிக்கு மாணவர்களை அனுப்ப சுற்றறிக்கை ஒன்று அனுப்பியது. இதனால் படிப்படியாக மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்து 250 வரை எட்டியது. அதுபோல ஆசிரியர்கள் எண்ணிக்கையும் அதிகரித்தது. ஆசிரியர்கள் அவரவர்கள் கற்பிக்கும் பாடங்களிலும் மிகத் திறமைசாலிகளாக இருந்தனர். போப், கணிதம், இறையியல் மொழிப் பாடங்களை மிக ஆர்வமுடன் சொல்லிக் கொடுத்துள்ளார்.

1845 ஏப்ரல் 21 ஆம் நாள், போப்பின் வாழ்க்கையில் அதிர்ச்சி உண்டாக்கும் சம்பவம்

ஒன்று நடந்தது. அவரது மனைவி மேரி ஆண்டர்சன் போப் தன்னுடைய 21-வது வயதில் இரண்டாவது குழந்தை பிரசவத்தின் போது மரித்துப் போனார். அவர் தூத்துக்குடியில் அடக்கம் செய்யப்பட்டார். போப்பின் கல்விப்பணிக்கு உறுதுணையாகயிருந்து செயல்பட்டவர். 1843-ல் பெண் பிள்ளைகளும் கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வத்தில் பெண்களுக்கான பள்ளியை ஆரம்பித்தார். மேரி அம்மையாரால் ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளியே இன்று தூய மேரி மகளிர் மேல்நிலைப் பள்ளி என்ற பெயருடன் வளர்ந்து திகழ்கிறது.

**<u>சமயப்பணி</u>**

போப் சாயர்புரத்தில் முதலில் கட்டி முடித்தக் கட்டிடம் சாயர்புரம் ஆலயம் தான். 1844-ல் தூய மாற்குவின் திருநாளான ஏப்ரல் 25-ஆம் நாள் அந்த ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

சாயர்புரத்திற்கு அருகிலுள்ள சுப்ரமணியபுரம், செபத்தையாபுரம், புதுக்கோட்டை போன்ற ஊர்களில் கிறிஸ்தவத்திற்குப் பலத்த எதிர்ப்புகள் இருந்தன. இருந்தாலும் போப் ஊர் ஊராக நடந்து சென்று தெருவீதிகளில் நின்று தமிழில் கிறிஸ்தவப் பாடல்களைப் பாடுவதும்,பிரசங்கம் செய்வதும் அவருக்கு வழக்கமாயிற்று. தமிழில் அவர் பாடியதையும், பேசியதையும் கண்ட மக்கள் வேடிக்கை பார்க்க வந்தனர். ஒருநாள் சுப்ரமணியபுரத்தில் தெருவில் நின்று போப் பிரசங்கம் செய்து கொண்டிருந்த போது ஒரு பெண் மாட்டுச் சாணத்தைத் தண்ணீரில் கரைத்து போப்பின் மீது ஊற்றி அவமானப்படுத்தி விட்டார். போப் அதைப் பொருட்படுத்தாமல் சகித்து கொண்டு தொடர்ந்து அவ்வூரில் பேசினார். இயேசு கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைத்தார். பலர் கிறிஸ்தவர்களாக மாறத் தீர்மானித்து இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். அதைத் தொடர்ந்து அவ்வூரில் ஓர் ஆலயமும் கட்டப்பட்டது.

இதே சுப்ரணியபுரத்திற்கு அருகில் செந்தியம்பலம் என்ற கிராமத்தில் செல்வாக்குள்ள பெரியவரும் தமிழ் புலவருமான நம்மாழ்வார் என்பவரும் வசித்து வந்தார். அவர் எங்கு சென்றாலும் குதிரையில் தான் செல்லுவார். அவர் போப்பின் நற்செய்தியால் கவரப்பட்டும் போப்பின் நண்பரானார். பின்னர் இயேசு கிறிஸ்துவை முற்றுமாக ஏற்றுக்கொண்டார். தன்னுடைய பெயரை ஞானசிகாமணி என்று மாற்றிக் கொண்டார். இதனால் பொறாமை கொண்ட கிறிஸ்தவர் அல்லாத சிலர் அவரைக் கொலை செய்யத் தீர்மானித்தனர். சாயர்புரத்தின் வடக்கேயுள்ள தேரிக்கு அவரை நயவஞ்சமாக அழைத்துச் சென்றனர். அங்கே ஆழமான குழியை வெட்டி அதனுள் தள்ளிவிட்டு குழியை தலைமட்டும் வெளியே தெரிகிற மாதிரி நிறுத்தி அவரை அவமானப்படுத்தும் வகையில் தலைமேல் சிறுநீர் கழித்து அவரைக் கொலை செய்து புதைத்தனர். இதை அறிந்த அவரது உறவினர்கள் ஞானசிகாமணியின் உடலைத் தோண்டி எடுத்து நல்லடக்கம் செய்தனர். ஒரு நல்லவரைக் கொன்றதால் இவரைக் கொன்றவர்களின் சந்ததிகள் பின்னர் பிள்ளை இல்லாமல் அழிந்து போயிற்று என்று இவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.

நம்மாழ்வார் கொல்லப்பட்ட அந்த தேரியில் அரசு, நெசவாளர்களுக்கென்று 50 வீடுகளைக் கட்டி இலவசமாகக் கொடுத்துள்ளது. இவ்வூர் இன்றும் நம்மாழ்வார் நகர் என்று அழைக்கப்படுகிறது. செந்தியம்பலம் கிராமத்தில் நம்மாழ்வார் நினைவாக ஞானசிகாமணி என்ற பெயரில் தென் இந்தியா திருச்சபை சார்பில் ஒரு தொடக்கப் பள்ளியுள்ளது.

- தொடரும்

# எமது தரிசனமும், எமது பணியும்

<u>எமது தரிசனம் :</u> **“இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே”**

<u>எமது பணி :</u> **கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது. மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் “ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை” அமைத்து அனுப்புதல்.**

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

**1. <u>STATE BANK OF INDIA</u>**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

**2. <u>INDIAN BANK</u>**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

**Merchant Name : Indian Bible Translators**
**UPI ID : INDIANBIBLE@SBI**

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

## கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 60/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 16. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

# ஜெபியுங்கள்! துதியுங்கள்!!

1. லம்பானி மொழியிலுள்ள புதிய ஏற்பாடு அச்சிடப்பட்டு கடந்த டிசம்பர் மாத இறுதியில் மொழிபெயர்ப்பாளர் சகோ. பரமேஸுக்கு அனுப்பப்பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். மார்ச் மாதம் நடக்கவுள்ள GC Meeting அன்று வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்முறை 500 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளது. இப்பிரதிகள் அனைத்தும் லம்பானி மொழி பேசும் மக்களுக்கு தாமதமின்றி விநியோகிக்கப்பட ஜெபியுங்கள்.

2. கடபா மொழியிலுள்ள புதிய ஏற்பாடு அச்சிடுவதற்காக BSI-க்கு அனுப்பப்பட்டு, அச்சிடப்பட்டு வருவதற்காக கர்த்தரைத் துதிப்போம். இப்பணியும் தடையின்றி முடிக்கப்பட்டு, மொழிபெயர்ப்பாளர் சகோ. சுனில்குமாருக்கு அனுப்பப்பட ஜெபியுங்கள்.

3. கோண்டாபொர்ஜா மொழியிலுள்ள புதிய ஏற்பாடு, பேஜ் செட்டிங் முடிக்கப்பட்டு மொழிபெயர்ப்பாளர் சகோ. நாராயண்பூரியாவுக்கு அனுப்பப்பட்டு சரிபார்ப்பு நடந்து வருவதற்காக கர்த்தரைத் துதிப்போம். இப்பணியை விரைவில் முடித்து பிரஸ்ஸிற்கு அனுப்பப்பட ஜெபியுங்கள்.

4. கடந்த மாதம் திட்டக்கூடுகையில் எடுக்கப்பட்ட தீர்மானம் நிறைவேறத்தக்கதாகவும், புதிய பிரதிநிதிகள் நியமிக்கப்படவும், முன்னேற்றப் பணியாளர்கள் இல்லாத ஊர்களில் ஊழிய பாரமுள்ள வாலிபர்கள் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

5. IBT-இன் திட்டக்கூடுகை திட்டமிட்டபடியே ஜனவரி மாதம் 10-ஆம் தேதியன்று கோவை IBT மையத்தில் நடந்ததற்காக கர்த்தரைத் துதியுங்கள். இந்நாளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தடையின்றி நடக்க ஜெபியுங்கள்.

6. இம்மாதம் 5 மொழிபெயர்ப்பாளர்கள் கோவை IBT மையத்திற்கு வந்து தங்கள் பணிகளைச் செய்யவும், சரிபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவர்களின் பாதுகாப்பான பயணத்திற்காகவும், மொழிபெயர்ப்புப் பணிகளுக்காகவும் ஜெபியுங்கள்.

## SEND ALL YOUR CONTRIBUTIONS

**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**

## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


| | |
|---|---|
| Editor & Published by On behalf of | **Mr. K. JAISINGH** **WORD PUBLISHERS TRUST** 14, Ashok Layout, Civil Aerodrome Road, Coimbatore - 641 014. |
| Printed by | **Mr. C.K. VENKATESH** Chandra Prabha Press 113-118, V.H. Road, CBE-1. |


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

A/c. No. : 1630413107
Name : Word Publishers Trust
Branch : Kalapatti
IFS Code : CBIN0282057

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd February 2026
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**